1968 ஆகஸ்ட் 26]

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, இப்பொழுது நடைமுறையில் அனுஷ்டித்து வரக்கூடிய மற்ற சிகிச்சையைவிட இந்த சிகிச்சை மிகவும் இலேசாகவும் எளிதாகவும் இருப்பதாகத் தெரிகிறது. இதில் ஏன் இதுவரையில் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தவில்லை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினருடைய அனுபவத்தை அரசாங்கம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும்.

M.C. Raja Hostel

* 54 *Q.*—THIRU G. GOMATHYASANKARA DIKSHIDAR AND THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Harijan Welfare and Information be pleased to state—

(*a*) whether there has been unrest among the inmates of the Government M.C. Raja Hostel, Madras ;

(*b*) if so, the reasons therefor ; and

(*c*) the action taken thereon ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :

(அ) ஆம்.

(இ) சென்னையிலுள்ள அரிசன நலத்துறையைச் சேர்ந்த எம். சி. ராஜா அரசாங்கக் கல்லூரி மாணவர்கள் விடுதியில் தங்கியுள்ள மாணவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட அரிசி உணவின் அளவு போதாதெனக் கருதினர். நாளொன்றுக்கு அளவிடப்படாத முழு அளவு சாப்பாடு இருவேளைகளிலும் கிடைக்கும் வகையில் தங்களுக்கான அரிசி உணவின் அளவு அதிகரிக்கப்படவேண்டுமென அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

(உ) இம் மாணவர் விடுதிக்கு அனுமதிக்கப்பட்ட உணவுப் பொருளின் பங்கீட்டு அளவு தனிப்பட்ட அடிப்படையில் தக்கவாறு உயர்த்தப் பட்டுள்ளது.

DR. H. V. HANDE : Last year there was a lot of trouble in these hostels because they were not getting good quality of food. Have their views been pointed out ? Has the position changed ? Are the students satisfied now ? Has the administrative set-up been changed in these places ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அவர்கள் கேட்டதற்குப் பிறகு மாறுதல் செய்யப்பட்டு, இரு வேளை அரிசி உணவும் ஒரு வேளை கோதுமை உணவும் தரப்பட்டு வருகிறது. அதில் இதுவரை எந்தவித மாற்றமும் செய்யப்படவில்லை.

திரு. ஏ. கே. பாலகிருஷ்ணன் : அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும் போது, உணவு விஷயமாகச் சில குழப்பம் வந்தது என்று சொன்னார்கள். ஆனால், எங்களுக்கு தந்த தகவல்கள் எல்லாம், ஜன்னலிலே "அண்ணா வாழ்க" என்று எழுதிய காரணத்தால் குழப்பம் வந்தது என்று சொல்லுகிறார்களே, அந்தத தகவல் அமைச்சர் அவர்களுக்கு வந்ததா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அந்தக் குழப்பம் ஏற்பட்டதற்குக் காரணம், வேறு. உணவுப் பங்கீடு மிகக் குறைவாகயிருக்கிறது என்ற காரணத்தையொட்டித்தான் அவர்கள் கேட்டுக்கொண்டனர். எனவே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அந்தப் பங்கிட்டினை அதிகமாக்கித் தந்துள்ளார்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இப்பொழுது ஏராளமான ஏழை மாணவர்கள் கல்லூரியில் சேர்ந்து படிக்க முன்வருகிறார்கள். அப்படி வரக்கூடிய நேரத்தில், ஹாஸ்டலில் இடம் கிடைக்காத காரணத்தினால் மிகவும்

சிரமப்படுகிறார்கள். ஆகவே, ஹாஸ்டலில் தங்கிப் படிக்கக்கூடிய மாணவர்களினுடைய தொகை அதிகப்படுத்தப்பட்டிருக்கிறதா ? இல்லையென்றால், மேலும் அதிகப்படுத்தப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அரசாங்கத்தின் நிதி நிலையை அனுசரித்து, அந்தத் தொகையை இப்பொழுது உயர்த்துவதற்கில்லை. இருந்தாலும் கூடுமானவரை பத்து சதவீதம் அதிகமாக ஒவ்வொரு விடுதியிலும் சேர்த்துக்கொள்ளுவதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது.

வானொலியில் மகளிர் பகுதி

*55 வினா.—**திருமதி வி. ப. பழனியம்மாள் :** மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல—செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

வானொலியில் ஒரு குறிப்பிட்ட நாட்களில் மட்டுமே மகளிர் பகுதி இடம் பெற்றுள்ளதை மாற்றி தினமும் மகளிர் பகுதி இடம் பெற மத்திய அரசாங்கத்திற்கு மாநில அரசு சிபார்சு செய்யும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 137, 138, 139, 140 ஆகிய எண்களுள்ள கேள்விகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகின்றன.

இப்பொழுது 141 எண்ணுள்ள கேள்வி எடுத்துக்கொள்ளப்படுகிறது.

Aluminium industry

* 141 *Q.*—Thiru S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state with reference to question No. 45 answered on the floor of the Assembly on 22nd June 1967—

(*a*) whether it is a fact that the aluminium industry was originally proposed to be started in the public sector ; and

(*b*) if so, how this was dropped subsequently ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :

(அ) ஆம்.

(இ) இந்தத் தொழிற்சாலை மத்திய அரசின் ஆலோசனையின்பேரில் தனியார் துறைக்கு விடப்பட்டது.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தத் தொழிலுக்குரிய மூலதனம் பெரும்பாலும் மாநில சர்க்காராலும் மத்திய சர்க்காராலும் போடப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், மின்சாரவாரியம், குறைந்த விலையில்—யூனிட்டுக்கு ஒரு பைசா என்ற அளவில்—மின்சாரம் வழங்கி வருகிறது. இதுபற்றி பதில் சொல்லுபோது, பொதுத் துறையில் ஆரம்பிப்பதற்குத் தகவல் ஒன்றும் இல்லை என்று ஏற்கனவே சொன்னார்கள். அது எவ்வாறு பொதுத் துறையில் ஆரம்பிக்காமல் விடப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1955-ம் ஆண்டில், அலுமினியத் தொழிற்சாலை நிறுவுவது பற்றி மாநில அரசு மத்திய அரசிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, 1955-ம் ஆண்டில் அலுமினியக் கமிட்டி என்று தனிக் குழு ஒன்றை இந்திய அரசு அமைத்து, அதுபற்றிய விவரங்களை ஆராயும்படியாக அந்தக் குழு கேட்டுக்கொள்ளப்பட்டது. அவர்கள் பல இடங்களைப் பார்த்து, மேட்டூரையும் பார்த்துவிட்டு, மேட்டூரைத் தேர்ந்தெடுத்து, அங்கு ஒரு